(2022-23-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்) (பக்கங்களின் எண்ணிக்கை : 2)

**SUBJECT CODE** **22 UTM 509**

**REG.NO:**

**என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) : : பொள்ளாச்சி**

**பருவ இறுதித் தேர்வுகள் : நவம்பர் - 2024**

**பி.ஏ. தமிழ் இலக்கியம்** **மதிப்பெண்கள் : 50**

**ஐந்தாம் பருவம்** **நேரம் : 3 மணி**

பகுதி – 3

## காப்பியங்கள்

**பகுதி – அ** **(10x1=10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** **(K1)**

1. வானவர் தோன்றல் வாய் வாள் கோதை யார்?

   (அ) கரிகாலன் (ஆ) நெடுஞ்செழியன் (இ) மாடலன் (ஈ) செங்குட்டுவன்

2. ஐங்கணைக்கிழவன் என குணமாலையார் இலம்பகம் யாரைச் சுட்டுகிறது?

   (அ) சச்சந்தன் (ஆ) கந்துக்கடன் (இ) கட்டியங்காரன் (ஈ) காமன்

3. இலங்கை மூதூரின் காவற் சோலையைப் பார்த்து மகிழ்ச்சியில் ஆரவாரித்தவன் யார்?

   (அ) அனுமன் (ஆ) குகன் (இ) வாலி (ஈ) சுக்ரீவன்

4. பாடுபெறு புகழ் வணிகன் – யார்?

   (அ) நிதிபதி (ஆ) கூலவணிகன் (இ) பொன்வணிகன் (ஈ) அறுவைவணிகன்

5. போர்க்களத்தில் அஞ்சாமல் எதிரிகள் உடலைப் புண்படக் கிழித்தவை எவை?

   (அ) எங்கும் பெருகிய பகைகள் (ஆ) வறுமை (இ) ஆசை (ஈ) துன்பம்

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்க.** (K2)

6. மணிமேகலை வராமையால் மாதவி உற்ற துயரைக் கூறுக.
7. வனத்திலிருந்த பாண்டவரைக் கண்டோர் யாவர்?
8. திவிட்டன் யாருடைய வலையில் பட்டான்?
9. சிவபெருமான் மீது விழுந்த அடி யார் மீதெல்லாம் பட்டது?
10. உடும்பு நபியை நோக்கி உரைத்தது யாது?

**பகுதி – ஆ** (5 x 3 = 15 )

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.**

11. அ) கண்ணகியின் வரலாற்றைக் கேட்டு, செங்குட்டுவனின் மனைவி உரைத்தது யாது? **(அல்லது)**

    ஆ) புத்த பீடிகையை வணங்கிய மணிமேகலை அத்தெய்வத்திடம் வினவியதை எடுத்துரைக்க. **(த.பி.பா.)**

***ETHICAL PAPER***

12. அ) குணமாலை தான் கொண்டு வந்த சுண்ணத்தை எங்ஙனம் புகழ்ந்துரைத்தாள்?

**(அல்லது)**

ஆ) கண்ணன் தருமனுக்கு உரைத்ததை விளக்குக.

13. அ) அனுமன் திருவடிபட்டதும் மலைக் குகைக்குள் நிகழ்ந்தவற்றை விளக்குக.

**(அல்லது)**

ஆ) விதூடகனின் தோற்றத்தைச் சுயம்வர சருக்கம் எவ்வாறு விளக்குகிறது?

14. அ) தனதத்தன் காரைக்காலம்மையாரைக் காரைக்காலிலேயே குடியமர்த்தியமைக்கான காரணத்தைக் கூறுக.

**(அல்லது)**

ஆ) பிட்டுக்கு மண் சுமக்க வந்த சிவபெருமானின் தோற்றத்தைக் கூறுக.

15. அ) வறுமை எஞ்சியுள்ளமைக்கான காரணத்தைத் தேம்பாவணி எவ்வாறு கூறியுள்ளது?

**(அல்லது)**

ஆ) உடும்பைச் சபையின் கண் விடக் கூறிய நபியிடம் வேடன் கூறியது யாது?

பகுதி – இ (5 x 5 = 25)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு மட்டும் விரிவாக விடையளிக்கவும்.** (K4& K5)

16. அ) செங்குட்டுவன் பத்தினித் தெய்வத்துக்குக் கல் கொண்ட தன்மையை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) மணிமேகலை பாத்திரம் பெற்ற பாங்கினைச் சான்றுடன் எடுத்துரைக்க.

17. அ) காமன் இளவேனில் பருவத்தைப் பிறப்பித்தமையை நும்பாடப்பகுதி வழி விவரிக்க. **(அல்லது)**

ஆ) பாண்டவர் வருகையால் காமியவனம் கவினுற்ற பாங்கை எடுத்தியம்புக.

18. அ) பேருருக்கொண்ட அனுமனுக்குத் துணைவர்கள் உரைத்தவற்றை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) திவிட்டன் சுயம்பிரபையின் அச்சத்தை எங்ஙனம் தீர்த்தான்? விவரிக்க.

19. அ) காரைக்காலம்மையாரின் பக்தித் திறத்தை எடுத்துரைக்க.

**(அல்லது)**

(ஆ) வந்தி சிவபெருமானிடம் வேண்டியதை விவரித்து எழுதுக.

20. அ) கடவுள் அவதரிக்கச் சூசை வேண்டிக் கொள்ளுமாற்றை நும் பாடப்பகுதி வழி விவரித்துரைக்க. **(அல்லது)**

ஆ) உடும்பு பேசியதைக் கேட்ட வேடனின் மனமாற்றத்தை எடுத்தியம்புக.

ETHICAL PAPER

******